தற்போது, மேற்படி இடம் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினர் தங்கள் உபயோகத்திற்கு தேவையாக இருக்கிறது என்று ஆட்சேபனை எழுப்பியுள்ளதால் தற்காலிகமாக வேலை நிறுத்தப் பட்டுள்ளது.

திண்டுக்கல்லில் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிக்கென தனி அலுவலகம் இல்லாததால், மதுரையில் உள்ள வேளாண்மை துறையின் உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தில் உள்ள இயந்திரங்களைக் கொண்டு திண்டுக்கல் வட்டத்தின், விவசாயி களின் விருப்பத்திற்கிணங்க கிணறுகள் துரிதமாக ஆழப்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.

(ஆ) & (இ) தேனியில் பணி நிலையம் கட்டப்பட்டால் அவ்வட்டாரத்தில் உள்ள பழுது பார்க்கப்பட வேண்டிய விவ சாயிகள் பயன்படுத்தும் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் குறைந்த செலவில் காலதாமதமின்றி விரைவில் பழுது பார்த்துக் கொடுக்கப் படும்.

திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம்

* வினா எண். 293— திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருப்பூரிலுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை விரிவு படுத்தவும் புதிய கோடவுன்களை கட்டவும் அரசு நட வடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில், 5050 டன் பெறுமான விளைபொருள்கள் வைப்பதற்காக ரூ. 19.10 இலட்சம் செலவில் கிடங்கு கட்டுவதற்காகவும், ரூ. 1 இலட்சம் செலவில் பணியாளர் குடியிருப்பில்லங்கள் கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது ரூ. 19.10 இலட்சம் செலவில் திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை விரிவு படுத்தவும் புதிய கிடங்குகள் கட்டுவதற்கும் தயாரிக்கப்பட்ட அமைப்புப் படம் மற்றும் திட்ட மதிப்பீடுகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இக் கட்டிடங்கள் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக்

[திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 8

கொண்டிருக்கின்றன. மேற்படி வேலைகள் முடிந்த பின்னர், பணியாளர் குடியிருப்பில்லங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

Honorary Medical Officers.

* Q. No. 294—THIRU R. E. CHANDRAN JAYAPAL: THIRU S. GANESAN : Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of the Government to abolish the employment of the Honorary Medical Officers in the Government Teaching Hospitals?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: ஆம்.

Krishnagiri Hospital.

* Q. No. 295—DR. K. SAMARASAM : Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal with the Government to open separate departments for Paediatrics and Cardiology in the Krishnagiri taluk Head-quarters Hospital?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை.

உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள்.

* வினா எண். 296—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 மார்ச் மாதம் முடிய உடல் ஊனமுற்றோர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அதில் கண் பார்வை அற்றவர்கள் எத்தனை பேர் ?